**செய்தி வெளியீடு எண்: 38/2022** **நாள்: 07.06.2022**

**சென்னை விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையத்தில்**

# பயணிகளின் வசதிகாக ரூ.87 லட்சம் மதிப்பில் 3 வசதிகள்

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி தகவல்**

சென்னை விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையத்தில் திரிசூலம் புறநகர் தொடர்வண்டி நிலையத்தின் வழியில் உள்ளே செல்லவும் வெளியேறவும் மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக நகரும் படிகட்டு, ரூ. 1 லட்சம் மதிப்பீட்டில் பாலூட்டும் தாய்மார்களுக்கான தனி அறை மற்றும் காற்றிலிருந்து குடிநீர் எடுக்கும் இயந்திரம் ரூ. 6 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு மெட்ரோ பயணிகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) தெரிவித்துள்ளார். இந்த மூன்று வசதிகளின் மொத்த **மதிப்பீடு ரூ.87 லட்சம்** ஆகும்.

இதுகுறித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவன இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சென்னை விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையத்தில் திரிசூலம் புறநகர் தொடர் வண்டி நிலையத்தின் வழியில் உள்ளே செல்லவும் வெளியேறவும் **ரூ.80 லட்சம் மதிப்பில்** நகரும் படிகட்டு பயணிகளின் வசதிக்காக அமைக்கப்பட்டு இன்று முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. இந்த இரயில் நிலையத்தில் பொது தளத்திலிருந்து நுழைவு வாயிலின் தரைதளத்திற்கு வருவதற்கான கூடுதல் நகரும் படிக்கட்டு பயணிகள் சேவைக்காக திறக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை தரைதளத்திலிருந்து பொதுதளத்திற்கு மேலே செல்ல மட்டும் நகரும் படிகட்டு இருந்தது.

இதேபோன்று பயணிகளின் வசதிக்காக பொதுதளத்திலிருந்து நடைமேடை வரை செல்ல மேலும் இரண்டு நகரும் படிகட்டுகள் இம்மாதம் இறுதிக்குள் அமைக்கப்படும். சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் கூடுதலாக 36 நகரும் படிகட்டுகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மெட்ரோ இரயிலில் பயணிக்கும் தாய்மார்களின் வேண்டுகோளுக்கு இணங்க விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கு குலுகுலு வசதியுடன் பாலூட்டும் அறை **ரூ.1 லட்சம் மதிப்பீட்டில்** அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டுள்ளது. பச்சிளம் குழந்தைகளுக்கான பாலூட்டும் அறை இனிவரும் காலங்களில் ஒரு சில மெட்ரோ இரயில் நிலையங்களில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

விமான நிலையம் மெட்ரோ இரயில் நிலையத்தில் காற்றிலிருந்து குடிநீர் வழங்கும் நவீன இயந்திரம் **ரூ.6 லட்சம் மதிப்பீட்டில்** அமைக்கப்பட்டுள்ளது. இது புது முயற்சியாக எடுக்கப்பட்டுள்ளது. இந்த அதிநவீன இயந்திரம் வளிமண்டல காற்றை குடிநீராக மாற்றுகிறது. இந்த இயந்திரம் பல்வேறு செயல்முறைகளுக்கு உட்பட்டு பயணிகளுக்கு குடிநீர் வழங்குவதற்காக சேமிக்கப்படுகிறது. இந்த குடிநீர் 100 சதவீதம் தூய்மையானது. இந்த குடிநீரில் அதிக அளவில் ஆக்ஸிஜன் உள்ளது. குடிப்பதற்கு மிகவும் ஆரோகியமானது.

இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முதன்மை பொது மேளாலர் ஏ.ஆர்.ராஜேந்திரன், கூடுதல் பொது மேலாளர்கள் எஸ்.கே.மாதவன், எஸ். சதீஷ்பிரபு, மேலாளர்கள் பி. லட்சுமி (வருவாய்) மற்றும் கே.எஸ்.அருண் (இயக்கம்), துணை மேலாளர் ஏ.அருள்ராதா (இயக்கம்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**